FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082836

C

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 10/2026 Date: நாள் 05.10.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.10.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.10.2026 Time : நேரம் 10.15 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.10.2026 Time : நேரம் 10.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 25 Kms / West

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.மு.பாண்டீஸ்வரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : திரு.முருகேசன் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 22.09.1995 நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : Indian நாட்டினம்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் டிரைவர்

(g) Address : முகவரி 2/90/1, கிழக்கு தேர் தெரு, எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.ஜெகவீரபாண்டியன், மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம், சிவகாசி விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 05.10.2026 காலை 10.15 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா, எதிர்கோட்டை, கீழத்தெரு, கதவு எண்.2/90/1-ல் வசிக்கும் திரு.முருகேசன் என்பவரின் மகன் திரு.மு.பாண்டீஸ்வரன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார்மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார்மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், எதிரிமீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 05.10.2026 காலை 11.15 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.ஜெகவீரபாண்டியன், மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

5.10.2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

5.10.26 at 13.45 hrs.

Name: பெயர் R. RAMANARAYANAN
Rank: நிலை INSP. OF POLICE.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.10/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

எண்.10/2026 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.பாண்டீஸ்வரன் அவர்களின் புகார் மனு விபரம் பின்வருமாறு. அனுப்புநர் மு.பாண்டீஸ்வரன், வயது 31/2026, த/பெ.முருகேசன், கதவு எண்.2/90/1, கீழத்தெரு, எதிர்கோட்டை, வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, எனது பெயரிலுள்ள TN95 P5648 என்ற நான்கு சக்கர வாகனத்தை பாண்டீஸ்வரன் டிராவல்ஸ் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். மேற்படி வாகனத்தை RBSK திட்டத்தின்கீழ் சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள தாயில்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வருடாந்திர (ஜனவரி/2026 முதல் டிசம்பர்/2026) ஒப்பந்த அடிப்படையில் மாத வாடகைக்கு இயக்கி வருகிறேன். மேற்படி வாகனத்திற்கான மாத வாடகையை தாயில்பட்டி வட்டார மருத்துவ அலுவலர் மூலம் வழங்குவதற்கு, சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலராக பணிபுரியும் மரு.ஜெகவீரபாண்டியன் என்பவர் பிரதி மாதம் ரூ.2,500/- கொடுக்க வேண்டுமென்று கேட்டார். நான் குடும்ப விசேஷம், வண்டி பராமரிப்பு மற்றும் குடும்ப செலவு என காரணம் சொல்லி மேற்படி பிரதி மாதம் ரூ.2,500/- பணத்தை கொடுக்காமல் தவிர்த்து வந்தேன். இந்நிலையில் சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலர் என்னை நேரில் வரசொன்னதன்பேரில் கடந்த 01.10.2026 அன்று மதியம் சுமார் 03.00 மணியளவில் சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலகத்திற்கு சென்று, சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலராக பணிபுரியும் மரு.ஜெகவீரபாண்டியன் என்பவரை சந்தித்தேன். அப்போது அவர், என்னங்க நான் கேட்ட பிரதி மாதம் ரூ.2,500/- பணத்தை கொடுக்காமல் காலம் தள்ளிட்டு போறீங்க, இதுவரைக்கும் கொடுக்காததற்கெல்லாம் சேர்த்து மொத்தமா ரூ.22,500/- பணத்தை கொண்டுவந்து கொடுங்க என்று கூறினார். அதற்கு நான் என்னால பணம் கொடுக்க முடியாமதானே சார் கொடுக்காமல் இருந்தேன். இப்ப மொத்தமா இவ்வளவு பணம் கொடுக்க சொன்ன எப்படி சார் கொடுக்குறது, கஷ்டபட்டவன் சார், பார்த்து செய்யுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000/- பணத்தையாவது திங்கள்கிழமை (05.10.2026) கொண்டுவந்து கொடுங்க என்றும், அன்று (05.10.2026) வரும்போது உங்களைபோல் ஒட்டிவரும் இதர வாகன உரிமையாளர்களிடமும் மாத வாடகை மாமூல் தலா ரூ.2,500/- பணத்தை வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கொடுத்தால்தான் செப்டம்பர்-2026 மாதத்திலிருந்து இனிவரும் காலங்களில் அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் காலம்தாழ்த்தாமல் வாடகை பணம் கிடைக்க சம்மந்தப்பட்ட வட்டார மருத்துவ அலுவலருக்கு அறிவுறுத்துவேன் என்றும், இதே வாகன உரிமையாளர்களுக்கு அடுத்த ஆண்டிற்குரிய வருட ஒப்பந்தம் கிடைக்கவும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் கண்டிப்புடன் கூறினார். ஆகையால் அப்போது அவரிடம் வேறுவழியில்லாமல் சரி என்று சொல்விட்டு வந்துவிட்டேன். ஆனால் மற்ற வாகன உரிமையாளர்களிடம் இருந்து

மாமூல் வசூல் செய்து கொடுக்கவோ, என் தரப்பில் இருந்து லஞ்சப்பணம் கொடுக்கவோ எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.5,000/- லஞ்சப்பணம் கேட்ட மரு.ஜெகவீரபாண்டியன், மாவட்ட சுகாதார அலுவலர், சிவகாசி என்பவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd) M.Pandeeshwaran, 5.10.26 Sir, Received the complaint on 05.10.2026 at 10.15 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.10/26 u/s 7 of the PC Act 1988 as amended in 2018 on 05.10.2026 at 11.15 hrs and took up for investigation. (Sd) (R.BOOMINATHAN) 5/10/26 Insp,V&AC,VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

